# தனித்துவமிக்க கலைஞர் எஸ். செல்வசேகரன்

**ஆடித்து முத்துக்கள் 116**

**- தெளிவத்தை ஜோசப் -**

### தனித்துவமிக்க கலைஞர் - எஸ்.செல்வசேகரன்

இலங்கை வானொலி வளர்த்துவிட்ட நாடகக்கலைஞர்களில் முக்கியமானவர் எஸ்.செல்வசேகரன். ஏராளமான வானொலி நாடகங்களில் நடித்து மக்கள் மத்தியில் தன்னை



நிலைநிறுத்திக் கொண்டவர் அவர்.

உபாலி என்னும் தமிழ் பேசும் சிங்கள பாத்திரத்துக்கு உயிரூட்டியதன் மூலம் உப்பாலி செல்வசேகரன் என்றே நாடக ரசிகர்களின் மனதில் நிறைந்து கிடந்த மனிதர் எஸ்.செல்வசேகரன். நகைச்சுவை நடிகரும் நாடகாசிரியருமான எஸ்.ராமதாஸ் இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் கொடி கட்டிப் பறந்த காலம் அது.

இலங்கை 'மக்கள் வங்கி' அதனுடைய வானொலி விளம்பரத்துக்காக ஒரு அரை மணி நேர நாடகத்தை தொடர் நாடகமாக ஒலிபரப்பியது. என் நினைவு சரி என்றால் அது 1974 அல்லது 1975 ஆக இருக்கலாம். ஏறத்தாழ இரண்டு வருடங்கள் போல் வாரம் தோறும் ஒலிபரப்பாகி வானொலி ரசிகர்களைக் கட்டிப் போட்டு வைத்திருந்த நாடகம் 'கோமாளிகள் கும்மாளம்' எஸ்.ராமதாஸ் எழுதிய இந்த நாடகத்தில் முக்கியமான கதாபாத்திரங்கள் மூன்று. மரிக்கார், உப்பாலி, அப்புக்குட்டி.

மரிக்காராக ராமதாஸும் உப்பாலியாக செல்வசேகரனும், அப்புக்குட்டியாக ராஜகோபாலும் மக்களைக் கவர்ந்திருந்தனர்.

இந்த நாடகம் 1976ல் திரைப்படமானபோது ஒருசில மாற்றங்களுடன் கதாநாயகன் - நாயகியாக சில்லையூர் செல்வராசனும் கமலினியும் நகைச்சுவைக்காக ராமதாஸ், செல்வசேகரன், ராஜகோபாலும் ஐயராக பி.எச்.அப்துல் ஹமீதும் நடித்தார்கள். புதியகாற்றை தொடர்ந்து அடுத்ததாக திரைக்கு வந்த இந்தப்படமும் வெளிவந்து அதிக நாட்கள் ஓடி சாதனை புரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நாடகத்துக்கு முன்பதாகவே முற்போக்கு எழுத்தாளர் அ.ந.கந்தசாமியின் 'மனக்கண்' நாவலை வானொலிக்காக நாடகமாக்கித் தயாரித்தார் பல்கலைச் செல்வர் சில்லையூர் செல்வராசன்.

மனக்கண் நாடகத்தில் பிரதம பாத்திரமேற்று நடித்தவர் எஸ்.செல்வசேகரன். இந்த நாடகத்தில் ஒரு அங்கமாக 'ஈடி பஸ்' நாடகம் வருகிறது.

மனக்கண் நாடகம் பற்றிக் குறிப்பிடும் சில்லையூரார் 'ஒத்தேல்லோ' பாத்திரத்துக்கு சினிமாவில் உயிரூட்டியவர் சிவாஜி என்று கூறுவதுண்டு. வானொலியில் 'ஈடிபஸ்' பாத்திரத்துக்கு தன் குரலாலேயே உயிர் கொடுத்தவர் செல்வசேகரன்' என்று கூறியுள்ளார்.

வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம் என்று தனது அமைதியான நடிப்பால் முத்திரை பதித்துக் கொண்டவர் செல்வசேகரன்.

கொழும்பிலே பிறந்து கொழும்பிலேயே வாழ்ந்து கொழும்பு நாடக உலகில் ஊடாடி, விழுந்தெழுந்து வந்த செல்வசேகரன் அவர்கள் தனது நடிப்புத்திறமையை மட்டுமே நம்பி வாழ்ந்தவர்.

ராமதாஸ், செல்வசேகரன், ராஜகோபாலின் மூவர் அணி ஒன்றாகவே செயற்பட்டு வந்தது.

எஸ்.ராமதாஸ் புதிதாக ஒரு விளம்பரக் கம்பெனி தொடங்கியபோது நான் தொழில் புரிந்த ஸ்டார் டொபி ஸ்வீட்ஸ் வகைகளின் வானொலி விளம்பரத்தை அவருடனான எனது தொடர்புகள் மூலம் அவரிடமே எங்கள் கம்பெனி கொடுத்திருந்தது.

இந்த விளம்பரங்களுக்காக நான் எழுதிய சின்னச் சின்ன நாடகங்களிலும் இவர்களே நடிப்பதுண்டு. அதன் மூலமாகவும், எனது பிரதிகளை எடுத்து செல்வதற்காகவும் செல்வசேகரனே அடிக்கடி என்னிடம் வருவதுண்டு. அப்போதெல்லாம் நிறைய நேரம் என்னுடன் உரையாடிச் செல்வார்.

ஒரு சங்கோஜத்துடன் அவர் உரையாடி பழகும் பண்பு எனக்கு அவரில் ஒரு அன்பு கலந்த மரியாதையை ஏற்படுத்தியிருந்தது. இலங்கையில் திரைப்படத்துக்கென தனியான நடிகர்கள் மிகக்குறைவே. நாடக நடிகர்களில் பலரே திரைப்படங்களிலும் நடிப்பதுண்டு.

கே.ஏ.ஜவாகர், எஸ்.ராமதாஸ், எஸ்.செல்வசேகரன் என்றுவரும் வரிசையில் கூடுதலான தமிழ்ப்படங்களில் மட்டுமல்லாமல் சிங்களப் படங்களிலும் நடித்துள்ளவர் எஸ்.செல்வசேகரன் அவர்கள்.

கோமாளிகள் 1976, ஏமாளிகள் 1978, எங்களில் ஒருவன் 1979, மாமியார் வீடு 1979, நாடுபோற்ற வாழ்க 1981, மண் ஆகிய தமிழ் திரைப்படங்களிலும் நெவத்த ஹமு வெமு, புஞ்சி சுரங்கனாவி சூரிய அரண இரமதியம, மச்சான் ஆகிய சிங்களத் திரைப் படங்களிலும் நடித்துள்ளார் அமரர் செல்வசேகரன்.

இயக்குனர் சோமாரத்ன திசாநாயக்காவின் புஞ்சி சுரங்கனாவி திரைப்படத்தில் 'வேலு' என்னும் பாத்திரமேற்று வெகு இயல்பாகவே நடித்துள்ள செல்வசேகரனுக்கு சிறந்த துணை நடிகருக்கான 'சரசவிய' விருது வழங்கப்பட்டிருக்கிறது.

பிலிம்பேர் விருது போன்று இலங்கைத் திரைப்படக் கலைஞர்களுக்கு சரசவிய இதழும் ஆண்டுதோறும் விருந்தளித்து கௌரவிக்கிறது. சரசவியின் 28 ஆவது விருது வழங்கும் விழாவில் (2010) சிறந்த துணை நடிகருக்கான விருதினை அளித்து அவரை கௌரவித்துள்ளது சரசவிய.

இந்த விருதுக்குப்பின் வீரகேசரியின் கலைக் கேசரிக்காக, எழுத்தாளரும் அரங்கியல் விமர்சகருமான ஏ.எஸ்.எம்.நவாஸ் அவர்கள் செல்வசேகரனை அவருடைய கொழும்பு மொகதீன் மஸ்ஜித் வீதியிலுள்ள அவரது வசதிகளற்ற சிறிய வாடகை வீட்டில் கண்டு உரையாடியபோது 'நீங்கள் சொந்த நாடகங்கள் தயாரித்து மேடையேற்ற முயற்சிக்கவில்லையா என்று கேட்டபோது 'என்னுடைய இத்தனை வருட கலை வாழ்வில் அந்த மாதிரியான விஸப் பரீட்சை எல்லாம் செய்ய விரும்பவில்லை.

என் நடிப்பு ஒன்றை மட்டுமே நம்பி இருக்கின்றேன்.

விளம்பரதாரர்களை அணுகும் வழிமுறைகள் ஒன்றும் எனக்குத் தெரியாது என்று சிரித்தாராம்.

தனித்துவமிக்க தலைஞரான எஸ்.செல்வசேகரன் அவர்கள் டிசம்பர் 2012ல் இயற்கையெய்தினார்.



theliwathai.joseph@thaiveedu.com

## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com**